**2019ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 28.02.2019ம் நாள் வியாழக்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திருமதி. ரா.மகேஸ்வரி பி.காம்.,**
**ஆணையாளர், தருமபுரி நகராட்சி**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியின் 2018–19–ம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2019–20ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு வருவாய் நிதி, மூலதனநிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவைகளுக்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியின் 2018–2019ம் ஆண்டு துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தடங்கம் உரக்கிடங்கில் பழைய குப்பைகளை அகற்றும் பணி, வீட்டு குடிநீர் வீட்டினைப்புகள் மற்றும் தானியங்கி பேட்டரி ஆட்டோ கொள்முதல் பணி, சுத்கரிக்கப்பட்ட குடிநீர் தானியங்கி மையம் அமைக்கும் பணி, மற்றும் நகர பேருந்து நிலையம் எதிரில் புதிய வணிகவளாகம் அமைக்கும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியது மற்றும் தருமபுரி நகராட்சியின் 2018–2019ம் ஆண்டின் திட்டபணிகளின் சாதனைகள் தொடர்பாக விளம்பரம் செய்தமைக்கு கீழ் கண்ட நாளிதழ்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1).ACCORD ADVERTISING AGENCIES | - | 93,345.00 |
| 2). Express Publications(Madurai)Limited | - | 9,000.00 |
| 3). ACCORD ADVERTISING AGENCIES | - | 71,820.00 |
| 4). ACCORD ADVERTISING AGENCIES | - | 68,145.00 |
| 5).BRIGHT ADVERTISING | - | 71,820.00 |
| 6).BRIGHT ADVERTISING | - | 1,00,538.00 |
| 7).MADHU ADS | - | 6 8,145.00 |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 3**

efராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறைகள் ஆணை ந.க.எண்.22866/பி3/2018 நாள் 23.08.2018ல் தருமபுரி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 ஆண்டின் கீழ் தடங்கம் உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை அகற்ற ரூ 371.00லட்சம் (மத்திய அரசு பங்களிப்பு 35%, மாநில அரசு பங்களிப்பு 55%, நகராட்சி பங்களிப்பு 10%) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ள 23.01.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | M/S.SMS Enviro Engineers and Infrastructure Covi | ரூ670.00 Cum குறைவு |
| 2 | M/S.ShreeBommu Industries Covi | ரூ670.50 Cum அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட வரிசை எண்1ல் கண்ட M/S.SMS Enviro Engineers and Infrastructure Covi நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 4**

நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.38984/2014/பி1 நாள்11.01.2019ல் 8வது மாநில உயர்மட்டகுழு கூட்டத்தின் முடிவின் படி தருமபுரி நகராட்சிக்கு 9 எண்ணிக்கை தானியங்கி பேட்டரி ஆட்டோ வாங்கி கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 13.02.2019 ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | M/S E-Man Motor Works Dharmapuri | 0.28% குறைவு |
| 2 | M/S SK Corporation System Consultancy SV Road Dharmapuri | 0.00% |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட M/S E-Man Motor Works Dharmapuri நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 5**

தமிழ் நாடு சட்ட மன்றபேரவையில் 2018–2019ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக்கோரிக்கை எண்34 அறிவிப்பு எண் 14ன் படி நகராட்சி பகுதிகளில் தானியங்கி குடிநீர் மையங்கல் அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட 23 இடங்களில் தானியங்கி குடிநீர் மையம் தனியார் பங்களிப்புடன் (PPP Mode) அமைக்கும் பணிக்கு 21.02.2019 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி PPP MODE மூலம் |
|---|---|---|
| 1 | M/S APEX ASSOCTATES EROAD | குறைவு |
| 2 | M/S VEDHA TECHNNOLOGEES EROAD | அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட M/S APEX ASSOCTATES EROAD நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 6**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 18 ஆறுமுக ஆச்சாரி தெருவில் புதியதாக கடைகட்டும் பணிக்கு 31.01.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.டி.பி.தங்கராஜ் | 0.05% குறைவு |
| 2 | திரு.என்.செல்வராஜ் | 0.07%அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட திரு.டி.பி.தங்கராஜ்அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 7**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 3ல் காமாட்சியம் தெருவில் உள்ள கழிவு நீர் தொட்டி 1.50லட்சம் கொள்ளவு கொண்டதாகும், மற்றும் வார்டு எண் 8 கோல்டன் தெருவில் உள்ள கழிவு நீர் தொட்டி 2.65லட்சம் கொள்ளவு கொண்டதாகும், இந்த இரு பொது கழிப்பிடத்தில் கழிவு நீர் தொட்டியில் கழிவு நீர் நிரம்பி உள்ளதால், கழிவு நீரினை வெளியேற்ற நகராட்சியில் கழிவு நீர் லாரி இல்லாததால் தனியர் லாரி மூலம் கழிவு நீரினை அகற்றும் பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவ்ாகள் மூலம் ரூ2.50 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 8**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கந்தசாமி வாத்தியார் தெரு கிழக்கு பகுதி மற்றும் சத்திரம் தெருவில் தினசரி அங்காடிகள் வைத்து, போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறுகள் ஏற்படுத்திவரும் கடைக்காரர்களை முறைப்படுத்தி கடை வைக்க ஏதுவாக, தெருவின் இரு பகுதிகளும் குறிப்பிட்ட அளவில் சுமார் 4 அகலம் கொண்ட தெரு இடத்தை மட்டும் கடைகளுக்கு பயன்படுத்தி கொள்ளும் வகையில் தெருவின் இரு புறத்திலும் வெள்ளை கலர் கோடு அமைத்து கொடுக்க ஏதுவாக இப்பணியினை,அசவர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் மூலம் ரூ0.80/– மதிப்பீட்டில் பணிகள் செய்தமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 9**

efராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறைகள் ஆணை ந.க.எண்.13277/2018/WS1 நாள்19.06.2018ல் தருமபுரி நகராட்சிக்கு ரூ233லட்சம் மதிப்பீட்டில் 6500 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள 13.02.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1 | M/S.Gowri Associates Chinna Kamachipatti Uthangari Keishnagri | 7.12% அதிகம் |
| 2 | M/S.Sri Siva Sakthi Associates B.Kamaraj Nagar Uthangari Keishnagri | 0.56% குறைவு |

**அலுவலகக்குறிப்பு:**

மேறகண்ட வரிசை எண் 2ல் கண்ட M/S.Sri Siva Sakthi Associates B.Kamaraj Nagar Uthangari Keishnagri அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 10**

தருமபுரி நகராட்சி காசாளர் பிரிவில் உள்ள COUNTING MACHINE பழுதடைந்து விட்டதால் தற்போது சொத்து வரி, குடிநீர் கட்டணம், கடைவாடகை, தொழில் வரி மற்றும் இதர வரிகள் செலுத்த பொது மக்கள் வருவதால் பணம் COUNTING செய்ய மிகவும் சிரமமாக உள்ளது எனவும் புதிய COUNTING MACHINE வாங்கி வழங்க காசாளர் தெரிவித்துள்ளார். எனவே புதிய COUNTING MACHINE வாங்க அசவர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் எம்/எஸ்.கார்திகேயன் கன்ஷக்சன் அவர்கள் மூலம் ரூ34,450/— மதிப்பீட்டில் வாங்கியமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 11**

இந்கராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படியான கடைகள் 31.01.2018 14.02.2018 28.08.2018 26.07.2018 21.08.2018, 24.09.2018.12.12.2018, 08.01.2019 ஆகிய தேதிகளில் மாத வாடகை அடிப்படையில் கடைகள் வரிசை எண் 1 முதல் 2 வரை எட்டாவது முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. 27.02.2019 அன்று எட்டாவது முறை நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட விவரப்படியான ஏலதாரர்கள் உயர்ந்தபட்ச மாத வாடகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடைகளின் விவரம் | கடை எண் | உயர்ந்த பட்ச ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஏலத்தொகை (ஒரு மாத வாடகை) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயர் | உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை(ஒரு மாத வாடகை) |
|---|---|---|---|---|---|---|
| 1. | இப்ராஹிம் ரோடு (ஆடு அடிக்கும் தொட்டி அருகில்) மாற்றுத்திறனாளி களுக்கு ஒதுக்கப்பட்டது | 1 | ஏ.கோவேந்தன் | | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை | 3600 |
| 2. | இப்ராஹிம் ரோடு (ஆடு அடிக்கும் தொட்டி அருகில்) | 2 | எம்.எஸ்.ஜீவா | 6346 | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை | 3825 |

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை எண் 1 முதல் 2 வரை கடைகளுக்கு அரசு ஆணை 92 நாள் 3.7.2007ன்படி ஒன்பது ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் அனுமதிக்கவும், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கடை வாடகை 15 சதவீதம் உயர்வு செய்யவும், உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளித்தொகை கோரியுள்ள 2 கடைகளை குத்தகைதாரருக்கு ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 12**

இந்நகராட்சி உட்பட்ட 33 வார்டுகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள களப்பணியாளர்களை நியமிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 56 களப்பணியாளர்களை 01.03.2019 முதல் 180 நாட்களுக்கு நிபந்தனைகளுக்கு உட்படுத்தி பணியமர்த்திக் கொள்ளவும் அவர்களுக்கு நாளொன்றுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அங்கிகரிக்கப்பட்ட தினக்கூலி வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 13**

இந்நகராட்சியில் பொது சுகாதார பணிக்கு கொசு புழுக்களை ஒழிக்க தேவையான மருந்துகள் இருப்பில் இல்லை. இதனால் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. டெங்கு காய்ச்சல் பரவ செய்யும் கொசு புழுக்கள் உற்பத்தி ஆவதை தடுக்கவும், முதிர்ந்த கொசுக்களை ஒழிப்பதற்கும் தேவைப்படும் மருந்துகள் கீழ்கண்ட விவரப்படி தமிழ்நாடு மருத்துவ கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து வாங்கிக் கொள்ள ஆகும் தோராய செலவினம் 18% ஜி.எஸ்.டி உடன் சேர்த்து ரூ.13.00 லட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Items | Littres |
|---|---|---|
| 1. | Pyrethrum 2% Extract<br>M/s.Nitapol Industries | 300 Lt. |
| 2. | Malathin Technical Gracle 95%<br>M/s. Coromandel International | 300 Lt. |
| 3. | Temephos Emulsitiable 50% EC<br>M/s. BR Agrotech Ltd., | 200 Lt. |
| 4. | Bacillus Thuringiensis Varlsralesis<br>M/s. Ajay Bio-tech (India) Ltd | 500 Lt. |

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர்**
தருமபுரி நகராட்சி.

**2019ஆம் வருடம் பிப்ரவரி மாதம்  28.02.2019ம் நாள் வியாழக்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 9 வரை | 660 முதல் 668 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 10 | 669 | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 11 முதல் 13 வரை | 670 முதல் 672 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்
தருமபுரி நகராட்சி.